DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C. No. 02 /2025 |
| Deposition of witness | : | P. W- 5 |
| Name | : | விஜயகுமார் |
| Father's /Husband Name | : | வீராச்சாமி |
| Village | : | முடிகொண்டான் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 37 |
| Occupation | : | உணவக பணியாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 18th day September, 2025.
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது திருநள்ளாரில் ஒரு உணவகத்தில் வேலை செய்து வருகிறேன். கடந்த 30.12.2024-ம் தேதி இரவு 09.50 மணியளவில் அன்னை உணவகத்தில் நான் பரோட்டா மாஸ்டராக வேலை செய்து வந்தேன். அப்போது பிரச்சனை ஏற்பட்டு கூட்டம் கூடிவிட்டது. அதன்பிறகு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. பிறகு போலிசார் என்னை விசாரித்து கையொப்பம் கேட்டதால் கையொப்பம் செய்து கொடுத்தேன். வேறு எதுவும் தெரியாது.

(அரசுத்தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதியளிக்கப்பட்டது)

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை :**

கடந்த 30.12.2024-ம் தேதி இரவு 09.50 மணியளவில் நன்னிலத்தில் உள்ள அன்னை உணவகத்தில் நான் பரோட்டா மாஸ்டராக பணி செய்த போது அங்கு வந்த ஆஜர் எதிரி எனது முதலாளி ஆறுமுகத்திடம் இலவசமாக சட்னி கேட்டார் என்றும், அவர் மறுத்ததால் ஆஜர் எதிரி ஆறுமுகத்தை பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார் என்றும், அப்போது கடைக்கு சாப்பிட வந்த பேரளம் பெண் காவலர் கேட்டதால் அவரையும் அசிங்கமான வார்த்தைகளால் ஆஜர் எதிரி திட்டினார் என்றும், அவரை ஆஜர் எதிரி கையால் பெண் காவலர் கன்னத்தில் அரைந்தார் என்றும், அவரது சட்டையை பிடித்து கீழே தள்ளிவிட்டார் என்றும், கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும், போலிசார் விசாரிக்க வாக்குமூலம் கொடுத்து விட்டு தற்போது ஆஜர் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

M S
BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN